ஸ்ரீ:

விளம்பி ஞூ ஆனி மீ
ஜூன் - ஜூலை 2018

மலர்: 1
இதழ்: 3

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்





**MONTHLY NEWSLETTER FROM:**

**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**

**MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,**

**Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com**





ஸ்ரீ:

விளம்பி ஸூ ஆனி மீ
ஜூன் - ஜூலை 2018

மலர்: 1
இதழ்: 3

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விஶ்வரூபம் | 6.00 | - | விஶ்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 8.00 - திருவாராதனம், 9.00 - ஶயநம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**

1. ஸ்ரீ R. முகுந்தன் 2. ஸ்ரீ P. சேஷாத்ரி 3. ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்

**Editorial Board :**

ஸ்ரீ நெல்வாய் ஸௌம்ய நாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4

Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604

Designed: yeSKay



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**

மயிலாப்பூர், சென்னை - 600004, போன்: 24953799

Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^{3}$ரி ஸமம் ஸ்தா$^{2}$நம் ப்$^{3}$ரஹ்மாண்டே$^{3}$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^{3}$வோ ந பூ$^{4}$தோ ந ப$^{4}$விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள் !

வஸந்த ருது – வைகாசி என்றாலே வைஷ்ணவர்கள் உள்ளத்தில் பக்தி பூத்துக் குலுங்கும் மாதமாகும். ஆம், பெருமாள்கோயில் ‘வைசா உத்ஸவம்’ என்ன; வஸந்தோத்ஸவம் என்ன; திருமயிலை திருவேங்கடவனின் ப்ரஹ்மோத்ஸவம் என்ன; ப்ரபந்ந ஸந்தான கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வாரின் வார்ஷிகோத்ஸவமென்ன – சுருங்கச் சொல்லில், இம்மாதத்தில் விஶேஷ உத்ஸவம் இல்லாத ஸாதாரண நாளே இல்லை என்னலாம்படி அமையும் ஸந்தர்ப்பம் ஆகும். இவ் வருடம் மயிலை ஸ்ரீநிவாஸனை முதலில் ப்ரஹ்மோத்ஸவம் கண்டருளும்படிக்கும்; அடுத்து தான் அநுபவிக்கும்படியாகவும், தேவப்பெருமாள் திருவுள்ளம் கொண்டான் போலும். உத்ஸவத்தில் ஸ்ரீநிவாஸனை ஸேவித்து அநுபவித்த பக்தர்கள், தொடர்ந்து அநுபவித்து ஸேவித்து நிற்க, விஶேஷ புகைப்படங்கள் இம்மாத இதழை அலங்கரிக் கின்றன. சிந்தாமல் கொள்மினீர்!

ஆழ்வார் பாடஸ்தலமாகிய அல்லிக்கேணிக்கே அடைமொழியாய் நிற்கும் மாடமாமயிலை சிறப்புப் பெறுவது, முதலாழ்வர்களில் முக்கியரான ‘பேயர்’ அவதரித்ததினாலே என்றால் மிகையாகாது. இவ்வாழ்வாரின் பெருமைதனை ஒரு பக்த ஶிகாமணி பொங்கிக் காட்டும் கட்டுரையும், ஆனி மாதத்தில் நிகழவிருக்கும் ‘கோடை உத்ஸவம்’ பற்றிய செய்தியும் இவ்விதழில் இடம் பெறுகின்றன.

மற்றோர் சிறப்பும் மாமயிலைக்கு உண்டு. இத்திருத்தலத்தில் அமைந்த இத் திருக்கோயிலின் நிர்வாஹம், நவீன முறைக்கு ஒப்ப, ‘‘அஶேஷ வடகலை வோட்டர்ஸ்’’-ஆல் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்படும் ’எலக்டோரல் போர்ட்’ அங்கத்தினர்களால் நியமிக்கப்படும் தர்மகர்த்தாக்களின் பொறுப்பில் திறம்பட இயங்கு வதே. அந்த ‘போர்டின்’’ தேர்தல் நடந்தேறிய இத்தருணத்தில் அதனைப்பற்றிய தர்மகர்த்தாக்களின் சிறப்புக் குறிப்பு, வாசகர்களின் கவனத்தை ஈர்க்கும்.

வழக்கமான கட்டுரைகளும் விஶேஷ அம்ஶங்களும் அமைந்த இவ்விதழ் உங்கள் கருத்துக்கும் கவனத்துக்கும் விருந்தாக அமையும்.

# WELL BEGUN IS HALF DONE

## FROM THE DESK OF TRUSTEES

Dear Devotees,

Beginnings are generally difficult, so a good beginning is very important. It is a fact that when we start any task in right earnest, it invariably goes on to reach the desired destination.

The release of first issue of our magazine is one such successful event. The Devasthanam is overwhelmed by the response from various quarters for the new venture – **Desika Sandesam.**

It gives us the thrust and encouragement to dedicate ourselves more and more in the service of our Acharyan Swami Desikan on the occasion of his 750th birth anniversary falling in September 2018.

### WELL SERVED



The members of the previous Electoral Board (May 2011-May 2018) along with the Trustees: **Sitting:** The three Trustees flanked by V. Venkatesh (President) and V. Narasimhan (Secretary). **Standing:** Sri R. Raman, Sri V. Kousthubadharan, Sri G. Badhrinarayanan, Sri N.S. Ranganathan, Sri R. Anantha Padmanabhan, Sri V. Balaji, Sri K. Sridhar, Sri R. Narayanan and Sri R. Murali Krishnan.

Vaikasi was an especially eventful month with the celebration of the **Annual Brahmotsavam** of the temple. The Editorial Board has striven to provide a colourful coverage of the proceedings with an eight-page exclusive photo section which, we are sure, will offer veritable visual delight to one and all.

Another important happening was the election of a **New Electoral Board** on completion of the seven-year term by the previous panel. The Devasthanam wishes to place on record its sincere thanks and appreciation to the outgoing members for their valuable suggestions and guidance.

The Trustees have immense pleasure in welcoming the New Members in the service of Lord Alarmelmanga Sametha Sri Srinivasa Perumal and Swami Desikan.

**The Members of the New Electoral Board:**

1. Sri N.S. Ranganathan (President),
2. Sri R. Anantha Padmanabhan (Secretary),
3. Sri L.N. Srinivasan,
4. Sri A. Srivatsan,
5. Sri G. Kakuthan,
6. Sri S. Bakthisaran,
7. Sri N. Sathyanarayanan,
8. Sri R. Murali Krishnan,
9. Sri N.V. Venkatesan,
10. Sri Balaji Raghavan and
11. Sri G.K. Sampathkumar.

Devotees will be well aware that **Sri Sudarsana Maha Yajnyam** is being performed in our Devasthanam every year and the main purpose of conducting it in the Temple is for the general prosperity of the devotees and the State, by extension. Sudarsana is an embodiment of Power and Success and He is the destroyer of obstacles. Participating in Sri Sudarshana Homam, it is believed, will bestow prosperity and welfare and usher in positive vibes. This will also be a good augury for bringing relief to the rain-starved city.

This year, **the Homam will be performed on 30-6-2018 (Saturday)** in the customary grand scale and we request the devotees to take part in this auspicious event in large numbers and receive the blessings of Lord Sri Sudarsana. Please find the invitation containing the details on the back inner wrapper.

*Loka: Samastha: Sukhino Bhavanthu!*

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:



# பேயர் காட்டிய பேருண்மை

(எஸ். ஸுதர்சனம், நங்கை நல்லூர்)

‘தேசிகன்’ என்னும் வார்த்தை ஆசார்யன் என்ற பொருளைத் தரும். ‘ஸந்தேஶம்’ என்றால் செய்தி, தகவல், சமாசாரம் என்று அர்த்தம். முதல் ஆழ்வார்களில் மூன்றாமவரான பேயாழ்வார் அவதரித்த புண்ய ஸ்தலம் மயிலாப்பூர். இது திருமயிலை என்றும் அழைக்கப்படும். அங்கே ஒரு கிணற்றில் மலர்ந்த குவளை/செவ்வல்லி மலரில் அவதரித்தவர் பேயாழ்வார். இவர் ‘வாள்’ அல்லது ‘நந்தகம்’ என்னும் திவ்யாயுதத்தின் அம்சமாய்த் தோன்றியவர்.

முதல் இரண்டு ஆழ்வார்களான பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் ஞான விளக்கு, பக்தி விளக்கு இவற்றை ஏற்றுகின்றனர். இருள் அகன்றது, ஒளி பரவியது. அஞ்ஞானம் அகன்றது, ஞானம் தோன்றியது. அந்த வெளிச்சத்தில், மஹாலக்ஷ்மியோடு எக்காலமும் சேர்ந்திருக்கும் ஸ்ரீநிவாசப் பெருமாளைக் கண்டு களித்து வணங்கி பேரின்பம் அடைகின்றார் பேயாழ்வார்.

மூன்றாம் திருவந்தாதியின் முதல் பாசுரம்:

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன், திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் -- செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன் பால் இன்று.

திருமாலோடு திருமகளையும் சேர்த்துப் பார்க்கவேண்டும். இந்த திவ்ய தம்பதிகளை இணைத்துப் பார்ப்பதே அழகு. இந்த ஸந்தேஶம் – செய்தி, நமக்கு பேயாழ்வாரிடமிருந்து கிடைக்கிறது.

பகவான் எங்கே இருக்கிறான்? என்று தேட வேண்டாம். நமக்குள்ளேயே அந்தராத்மாவாய் நின்று அருள் புரிகிறான் என்ற செய்தியும் பேயாழ்வாரிடமிருந்து கிடைக்கிறது.

பகவான் அந்தர்யாமி என்பதை உபதேசம் செய்கிறார் பேயாழ்வார். பூமிக்குள்ளும் அவனே. எட்டு திசைகளுக்குள்ளும் அவனே. வேதங்களுக்குள்ளும் அவனே. வேதம் ஓதுவார்களுக்குள்ளும் அவனே. நிலவுக்குள்ளும் அந்தராத்மாவாய் அவனே. ஆகாசத்தை இயக்குபவனாய், வெள்ளம் பெருக்கெடுத்துப் பாயும் அருவிகளின் முழக்கமாய், எங்கும் அந்தராத்மாவாய் வாழ்கின்றான் பகவான். இதுவே பேயாழ்வாரிடமிருந்து கிடைக்கும் ஸந்தேஶம்.



தமிழ்த் தலைவன் பேயாழ்வார்

### பகவானின் ஐந்து நிலைகள்

*ஐந்து நிலைகளில் பகவான் வசிக்கிறான். பரம்/பரம பதம் முதல் நிலை. திருப்பாற்கடல் இரண்டாம் நிலை. விபவம் - அவதாரம் மூன்றாம் நிலை. அந்தராத்மாவாய் நம் எல்லோருக்குள்ளும் நிலை நின்றிருப்பது நான்காம் நிலை. அர்ச்சாவதார மூர்த்தியாய் எல்லா திவ்ய தேசங்களிலும், அபிமான ஸ்தலங்களிலும் நித்யவாஸம் செய்வது ஐந்தாம் நிலை.*

ஸ்ரீ:

இறையாய் நிலனாகி எண்திசையும் தானாய்
மறையாய் மறைப்பொருளாய் வானாய் -- பிறை வாய்ந்த
வெள்ளத்தருவி விளங்கொலி நீர் வேங்கடத்தான்
உள்ளத்தின் உள்ளே உளன். (39)

கபட நாடகம் ஆடி மஹாபலியிடமிருந்து மண்ணளந்து கொண்டவன். உண்மை. மாயைகள் செய்வதில் வல்லவன். மாமாயன். அதுவும் உண்மை. கம்ஸனை வஞ்சனையால் வஞ்சித்தவன், உண்மை. கௌரவர்களை அழித்துப் பஞ்ச பாண்டவர்களைக் காப்பாற்ற பகவான் என்ன தான் செய்யவில்லை?

ஆனால் எம்பெருமான் தர்மத்தை காப்பாற்றுபவன். பக்தர்களுக்கு இன்பம் பயப்பவன். அடியவர்களுக்குக் கருணை மழை பொழிபவன். அவன் திருவடிகளே நமக்குக் கதி. அவனே நம் உள்ளத்தில் அந்தராத்மாவாய் வீற்றிருக்கிறான். அவனைத்தேடி நாம் எங்கும் போக வேண்டாம். இதுவே பேயாழ்வாரிடமிருந்து நமக்குக் கிடைக்கும் ஸந்தேஶம் - தகவல்.


இன்னுமொரு பாசுரம் அநுபவிப்போமா?

இனியவன் மாயன் என உரைப்பரேலும்
இனியவன் காண்பரியனேலும் -- இனியவன்
கள்ளத்தால் மண்கொண்டு விண் கடந்த பைங்கழலான்
உள்ளத்தின் உள்ளே உளன். (83)

நம் உள்ளத்தில் அந்தராத்மாவாய் வீற்றிருக்கும் ஸ்ரீநிவாஸனே திருமலையில் ஸ்ரீநிவாஸனாக, அர்ச்சா அவதார மூர்த்தியாக வீற்றிருக்கிறான். உடனே நாம் என்ன செய்ய வேண்டும்? அதையும் பேயாழ்வாரே நமக்கு உபதேசிக்கிறார்.

நாமம் பல சொல்லி நாராயணா என்று
நாம் அங்கையால் தொழுதும் நன்னெஞ்சே வா!... (8)

பகவானின் ஸஹஸ்ர நாமங்களைச் சொல்லவே வாய். அவனைத் தொழவே கைகள். அவனைக்கண்டு களிக்கவே கண்கள். வாருங்கள்! ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம் சென்று ஸ்ரீஅலர்மேல்மங்காநாயிகாஸமேதஸ்ரீஸ்ரீநிவாஸப் பெருமானை ஸேவித்து மகிழ்வோம்!




ஸ்வாமி தேசிகனும் ஸ்ரீ பேயாழ்வாரும்







ப்ரஹ்மோத்ஸவக் காட்சிகள்
















ப்ரஹ்மோத்ஸவக் காட்சிகள்



## ப்ரஹ்மோத்ஸவக் காட்சிகள்

















ப்ரஹ்மோத்ஸவக் காட்சிகள்





ப்ரஹ்மோத்ஸவக் காட்சிகள்







ஸ்ரீ:









ப்ரஹ்மோத்ஸவக் காட்சிகள்





ப்ரஹ்மோத்ஸவக் காட்சிகள்











ஸ்ரீ:

கண்ணுக்கினியன







ப்ரஹ்மோத்ஸவக் காட்சிகள்



கருத்தைக் கவர்ந்தவை



ஐந்தில் விளைந்தது









ஸ்ரீ:

# குளிரவைக்கும் ஒரு விழா

(ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்)

**பூசும் சாந்து என்னெஞ்சமே புனையும் கண்ணி எனதுடைய வாசகம் செய் மாலையே வான் பட்டாடையும்...** என்பதாக எம்பெருமானுக்குச் செய்யும் ஒவ்வொரு கைங்கர்யமும் மக்களைப் போய்ச் சேர்கின்றது. அவ்வாறாக கோடை உத்ஸவமும் ஆச்ரிதர்களுக்கு ஒரு வரப்ரஸாதமாக அமைந்திருக்கிறது.

பகவத் சாஸ்த்ரமான ஆகமங்களில் இந்தக் கோடை உத்ஸவம் பற்றி எந்த ஒரு சான்றும் இல்லை என்றாலும், இந்தக் கோடை உத்ஸவம் என்பது எம்பெருமானுக்கு ஒரு உபசார உத்ஸவமாகும்.

வஸந்தகாலத்தில் ப்ரஹ்மோத்ஸவம் முடிந்த உடனோ அல்லது அதற்கு முன்பாகவோ கொண்டாடப்படுகின்ற வஸந்த உத்ஸவத்தில் இருந்து இந்தக் கோடை உத்ஸவம் வேறுபடுகின்றது.

**கோடை உத்ஸவம்**
**15.06.2018 முதல் 21.06.2018 வரை**
**7 நாட்கள் நடைபெறுகிறது**

இப்படி பல கோயில்களில் இந்தக் கோடை உத்ஸவம் கொண்டாடப்பெற்று வந்தாலும், ஒப்பவரில்லா மாதர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாடமாமயிலையில் ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்தில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸனுக்கு மிகவும் விமர்சையாக **ஆனி ஹஸ்தத்துடன் நிறைவடையும் படி ஏழு நாட்கள்** நடைபெறுகிறது.

இந்தக் உத்ஸவத்தில் ஏழு நாட்களும் காலை ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் உபயநாச்சிமார்களுடன் திருமஞ்சனம் கண்டருளி ஆஸ்தானத்தில் விச்ராந்தியாக எழுந்தருளியிருப்பார்.

மாலையில் பெருமாள் ஒருதோளுக்கினியானிலும் உபயநாச்சிமார்கள் இருவரும் தனியாக இன்னொரு தோளுக்கினியானிலும் பத்தி உலாத்தலாக கோடை உத்ஸவ மண்டபத்திற்கு எழுந்தருளி ஊஞ்சல் ஸேவை கண்டருளுகின்றனர். பிறகு குடை, சாமரம் முதலியவற்றுடன் திருகோயிலில் இருந்து பட்டர்களால் புஷ்பங்கள் மற்றும் விழுதிக்காப்புடன் கூடிய சந்தனம் முதலியவைகள் எழுந்தருளப் பண்ணப் படுகின்றன.

அதன் பிறகு எம்பெருமான் திருவாராதனம் கண்டருளியபின்பு மேற்கூறிய விழுதிக்காப்புடன் கூடிய சந்தனம் மற்றும் புஷ்பங்கள் அவனுக்கும் பிராட்டிமார்களுக்கும் சாத்தப்பெற்று, உபசாரமாக தூபதீபாதிகள் ஸமர்ப்பிக்கப் பட்டு அதன் பிறகு திருவமுதும் கண்டருளப்பண்ணப்படுகின்றது.

அதன் பிறகு பக்தர்களுக்கு தீர்த்தப்ரஸாதம் விநியோகிக்கப்பட்டு ஸ்ரீ பெருமாள் உபயநாச்சிமார்களுடன் திருவீதி புறப்பாடு கண்டருள்கிறான்.

இவ்வகையிலே மாடமாமயிலை வாஸனாம் தண்திருவேங்கடமுடையான் நம் ஸ்ரீநிவாஸனின் கோடை உத்ஸவ வைபவம் நம்முடைய பாக்யத்தாலும், நம்முடைய ஆசார்யகளுடைய அநுக்ரஹத்தாலும் இந்த ஆனி மாதத்திலும் இத்திருமயிலை திவ்யதேசத்திலே நம்மால் அநுபவிக்கப்பட இருக்கின்றது.

இந்தக் கோடை உத்ஸவம் நம் ஸந்நிதியில் ஸ்ரீ உ.வே. அழிசூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின் முயற்சியினால் தொடங்கப்பெற்று சுமார் 40 வருடங்களாக விசேஷமாக நடைபெற்று வருகின்றது.

இவ்வுத்ஸவம் எம்பெருமானுக்கு என்று நினைக்கின்றோம், அல்ல, நமக்கு இவ்வுத்ஸவம். ஏனெனில் வையம் ஏழும் உண்டவன் அவன். கோடையிலே ஸமஸ்த ஜீவராசிகளும் தகிக்க, அஜ்ஜீவராசிகள் எல்லோரும் அவன் வயிற்றில் உள்ளதால் அவனைக் குளிர வைத்தால் உலகம் குளிரும் என்னும் தாத்பர்யத்தைச் சொல்லாமல் சொல்லும் உத்ஸவமே கோடை உத்ஸவம்.

# விளம்பி வருட ஆனி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயதாரர் |
|---|---|---|---|---|---|---|
| ஜூன்/ ஜூலை | ஆனி | | | | | |
| 15.06.18 | 1 | த்விதீயை | வெள்ளி | திருவாதிரை | **மாதப் பிறப்பு – கோடை உத்சவம் – முதல் நாள் பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் மாலை பெருமாள், தாயார் உள்புறப்பாடு பின்பு பெருமாள் திருவீதி புறப்பாடு | ஸ்ரீ.K.S.சந்தானம், ஸ்ரீ.K.வரதராஜன் **ஸ்ரீ.M.V.ஸ்ரீநிவாசன் |
| 16.06.18 | 2 | திருதீயை | சனி | புனர்வஸு | கோடை உத்சவம் – இரண்டாம நாள் பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் மாலை பெருமாள் திருவீதி புறப்பாடு | ஸ்ரீமதி.L.வத்சலா, ஸ்ரீ.D.வரதராஜன் |
| 17.06.18 | 3 | சதுர்த்தி | ஞாயிறு | புஷ்யம் | கோடை உத்சவம் – மூன்றாம் நாள் பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் மாலை பெருமாள் திருவீதி புறப்பாடு | ஸ்ரீ.A.R.கிருஷ்ணன், ஸ்ரீ.K.ரங்கராஜன் |
| 18.06.18 | 4 | பஞ்சமி / ஷஷ்டி | திங்கள் | ஆயில்யம் | கோடை உத்சவம் – நான்காம் நாள் பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் மாலை பெருமாள் திருவீதி புறப்பாடு | ஸ்ரீ.T.P..ரங்கராஜன், ஸ்ரீ.G.பத்ரிநாராயணன் |
| 19.06.18 | 5 | சப்தமி | செவ்வாய் | மகம் | கோடை உத்சவம் – ஐந்தாம் நாள் பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் மாலை பெருமாள் திருவீதி புறப்பாடு | ஸ்ரீமதி.ஸ்ரீநிதி மோகன், ஸ்ரீ.N.கஸ்தூரிரங்கன் |
| 20.06.18 | 6 | அஷ்டமி | புதன் | பூரம் / உத்திரம் | கோடை உத்சவம் – ஆறாம் நாள் பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ் சனம் மாலை பெருமாள், தாயார் உள்புறப்பாடு பின்பு பெருமாள் திருவீதி புறப்பாடு | Dr.P.கிருஷ்ணமூர்த்தி ஸ்ரீ.N.ஸ்ரீநிவாசன் |
| 21.06.18 | 7 | நவமி | வியாழன் | உத்திரம்/ ஹஸ்தம் | கோடை உத்சவம் – ஏழாம் நாள் பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் மாலை பெருமாள் திருவீதி புறப்பாடு | ஸ்ரீ.R.S.இராகவன். ஸ்ரீ.N.R.ஸ்ரீநிவாசாச்சார் |
| 22.06.18 | 8 | தசமி | வெள்ளி | சித்திரை | ஸ்ரீஸுதர்சன ஜெயந்தி சக்கரத்தாழ்வார் மூலவர், உத்ஸவர் திருமஞ்சனம் மாலை ஆஸ்தானம் | ஸ்ரீ.N.R.இராமசுவாமி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 23.06.18 | 9 | தசமி (3.01) / ஏகாதசி | சனி | ஸ்வாதி | பெரியாழ்வார் திருநக்ஷத்ரம் காலை பெருமாள், பெரியாழ்வார் திருமஞ்சனம் மாலை பெருமாள் கருட வாஹனம், பெரியாழ்வார் யானை வாஹனம் – இரவு ஆஸ்தானம், சேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ.மாடபூசி சுதர்சனம் ஐயங்கார் கட்டளை |
| 24.06.18 | 10 | ஏகாதசி (2.36) / த்வாதசி | ஞாயிறு | ஸ்வாதி | காலை பெருமாள் உத்சவர் திருமஞ்சனம் மாலை பெருமாள் வீதி புறப்பாடு | ஸ்ரீமதி.S.பாமா |
| 25.06.18 | 11 | த்வாதசி (3.23) / த்ரயோதசி | திங்கள் | அனுஷம் | ஸ்ரீமந்நாதமுனிகள் திருநக்ஷத்ரம் காலை பெருமாள், நாதமுனிகள் திருமஞ்சனம் மாலை பெருமாள், நாதமுனிகள் வீதிபுறப்பாடு இரவு ஆஸ்தானம், சேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீமதி.ருக்மணி அம்மாள் பண்டு, ஸ்ரீ.A.வாசுதேவன்– ஸ்ரீ.N.V.பாலாஜி |
| 26.06.18 | 12 | சதுர்த்தசி | செவ்வாய் | அனுஷம் | திருமால்வடை | |
| 27.06.18 | 13 | சதுர்த்தசி (8.43) / பௌர்ணமி | புதன் | கேட்டை | தொண்டரடிப்பொடிகள் | |
| 28.06.18 | 14 | பௌர்ணமி (12.49) / பிரதமை | வியாழன் | மூலம் | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம் மாலை பெருமாள் வீதி புறப்பாடு | ஸ்ரீ.N.ஸ்ரீநிவாசன் |
| 29.06.18 | 15 | த்விதீயை | வெள்ளி | பூராடம் | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் – உத்ஸவர் திருமஞ்சனம் மாலை தாயார் உள் புறப்பாடு | ஸ்ரீ.அத்திகிரி அருளாளன் |
| 30.06.18 | 16 | அதிதி | சனி | உத்திராடம் | ஆளவந்தார் | |
| 01.07.18 | 17 | திரிதியை | ஞாயிறு | திருவோணம் | காலை பெருமாள், தேசிகன் அலேர்மேல்மங்கா புரம் எழுந்தருளல் – திருமஞ்சனம் மாலை பெருமாள், தேசிகன் திரும்புகால் புறப்பாடு | கொடநகர் Dr.S.துரைசுவாமி ஐயங்கார் பண்டு |
| 02.07.18 | 18 | சதுர்த்தி | திங்கள் | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |
| 03.07.18 | 19 | பஞ்சமி | செவ்வாய் | சதயம் | காலை பேயாழ்வார் திருமஞ் சனம் மாலை பேயாழ்வார் வீதி புறப்பாடு | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோசியேஷன் |
| 04.07.18 | 20 | ஷஷ்டி | புதன் | பூரட்டாதி | திருமால்வடை | |
| 05.07.18 | 21 | சப்தமி | வியாழன் | உத்திரட்டாதி | திருமால்வடை | |
| 06.07.18 | 22 | அஷ்டமி | வெள்ளி | ரேவதி | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை தாயார் உள் புறப்பாடு | ஸ்ரீமதி.A.L.ரங்கமணி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 07.07.18 | 23 | நவமி | சனி | அச்வினி | திருமால்வடை | |
| 08.07.18 | 24 | தசமி | ஞாயிறு | பரணி | திருமால்வடை | |
| 09.07.18 | 25 | ஏகாதசி | திங்கள் | கார்த்திகை | காலை – பெருமாள் திருமஞ்சனம் மாலை பெருமாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ.ராஜகோபாலன் |
| 10.07.18 | 26 | த்வாதசி | செவ்வாய் | ரோஹிணி | மாலை கண்ணன், திருப்பாணாழ்வார் ஆஸ்தானம் | |
| 11.07.18 | 27 | த்ரயோதசி / சதுர்த்தசி | புதன் | மிருகசிரீஷம் | திருக்கச்சி நம்பிகள் | |
| 12.07.18 | 28 | சதுர்த்தசி (14.23) / அமாவாசை | வியாழன் | திருவாதிரை | ஸ்ரீபாஷ்யகாரர் | |
| 13.07.18 | 29 | பிச்ச அமாவாசை / [பிரதமை] | வெள்ளி | புனர்வஸு | காலை – பெருமாள் தாயார் மூலவர் உத்ஸவர் திருமஞ்சனம் மாலை பெருமாள் திருவீதி புறப்பாடு பின்பு தாயாருடன் உள் புறப்பாடு | ஸ்ரீ.M.A.பார்த்தசாரதி, ஸ்ரீ.ஸ்ரீராமன் |
| 14.07.18 | 30 | த்விதீயை | சனி | புஷ்யம் | திருமால்வடை | |
| 15.07.18 | 31 | திருதீயை | ஞாயிறு | ஆயில்யம் | திருமால்வடை | |
| 16.07.18 | 32 | சதுர்த்தி | திங்கள் | மகம் | திருமழிசையாழ்வார் | |

## வைணவ வழக்கு

### ஒரு 10 சொல் பழகுவோம்

| | |
|---|---|
| கட்டியம் | = எம்பெருமானின் பெருமைகளைச் சொல்லி வாழ்த்தும் வாக்கியம் |
| தீர்த்தம் | = எம்பெருமானின் அபிஷேக ஜலம் |
| ஸ்ரீ ஶடாரி | = எம்பெருமானின் திருவடி நிலையாழ்வார் |
| திருத்துழாய் | = துளஸி |
| மஞ்சள்காப்பு | = எம்பெருமானுக்கு ஸமர்ப்பித்த மஞ்சள்பொடி |
| ஏகாந்தம் | = பக்தர்கள் பகிரங்கமாக ஸேவிக்க இயலாத தருணம் |
| சாத்துப்படி | = அலங்காரம் |
| பரியட்டம் | = பெருமாள் வஸ்த்ரம் |
| திருச்சின்னம் | = எம்பெருமான் எழுந்தருளும் ஸமயம் ஊதப்படும் வாத்யம் |
| கை விளக்கு | = எம்பெருமான் எழுந்தருளும்போது மரியாதைக்கு கையில் பிடிக்கப்படும் விளக்கு |

## ஆனியில் முக்கிய உத்ஸவங்கள்

**கோடை உத்ஸவம்** (ஏழு நாட்கள்):
ஜூன் 15 (வெள்ளி) முதல் 21 (வியாழன்) வரை

**ஸுதர்சன ஜயந்தி** (ஆனி - சித்திரை):
ஜூன் 22 (வெள்ளி)

**பெரியாழ்வார் சாற்றுமுறை** (ஆனி - ஸ்வாதி):
ஜூன் 23 (சனி)

**ஸ்ரீமந்நாதமுனிகள் சாற்றுமுறை** (ஆனி - அநுஷம்):
ஜூன் 25 (திங்கள்)

## காதில் விழுந்தது...

ஒருவர் :

வாஹன மண்டபத்துக்கு ஏன் இத்தனை படிகள்?

பெரியவர் :

பெருமாள் இறங்கி வராரே, அது அவர் பரமபதத்தை விட்டு நம்மை அருள்வதற்காக ‘கீழே இறங்கி ங்இரங்கி வருவதை’ குறிப்பது போல் இல்லை !! அதற்காகத்தான்.

ஶ்ரீ:

## சிறுவர்க்காக

# பாட்டீ! ஒரு கதை சொல்லேன்...

**பங்கஜம் பாட்டி :** ஸ்வாமி தேஶிகனுக்கு பெற்றோர்கள், நற்குடியில் பிறந்த திருமங்கை என்ற நங்கையுடன் கல்யாணம் பண்ணிவைச்சா. இல்லற அறத்தை குறையற, நடத்தி வந்த அவருக்கு வேதாந்த ஸம்ப்ரதாயத்தை நிலைநாட்டுவதிலே ஆர்வம் அதிகம் இருந்தது. ஏறக்குறைய நாற்பதாவது வயதுலதான் அவருக்கு ஒரு ஆண் மகன் பிறந்தான். குழந்தைக்கு குலதெய்வமான வரதன் பெயரையே இட்டார்சி இதற்கிடைல அப்புள்ளார், தனக்கு வயஸாயுடுத்து-ன்னு உணர்ந்து ஶ்ரீபாஷ்யகாரரின் பாதுகைகளையும், தாம் பஞ்சஸம்ஸ்காரத்துக்கு பயன்படுத்திய திருவாழி-திருச் சங்கத்தையும் ஸ்வாமி தேஶிகனுக்கு அநுக்ரஹிச்சுட்டு திருநாட்டை அலங்கரித்தார். அது முதல் அவர் அச்சிறு வயதிலேயே ஆசார்யனாக பல அறிஞர்களால் வரிக்கப்பட்டார்.

**ஸுமதி :** பாட்டீ ! சின்னவாள்ளாம் ஆசார்யனா ஆகலாமா ? அதுவும் வயதுல பெரியவாளுக்கு.

**பங்கஜம் பாட்டி :** நல்ல ஞானமும் அநுஷ்டானமும் கொண்டவாளா இருந்தா ஆசார்யனா கொண்டாடப்படுவதற்கு வயஸு ஒரு தடையேயில்லை.

**ஸுமதி :** பாட்டீ ! ஸ்வாமி ஸ்வாமி தேஶிகன் எப்பவும் காஞ்சீபுரத்துலதான் எள்ளியிருந்தாரா ?

**பங்கஜம் பாட்டி :** இல்லம்மா ! திருவயிந்திரபுரம் ஶ்ரீ தேவநாதப் பெருமாள் நியமிச்சார் போல இருக்கு; சில காலம் அங்கு வாஸம் செய்தார். அங்க இருக்கிற, ஔஷத மலைல, ந்ருஸிம்ஹன் ஸந்நிதியும் ஒரு அரச மரமும் இருக்கு. அதன் அடிவாரத்தில் அமர்ந்து, ஆசார்யன் உபதேஶம் செய்திருந்த கருட மந்த்ரத்தை ஆவ்ருத்தி செய்தார். அதனால் ஸந்தோஷப்பட்ட கருட பகவான், ஸ்வாமிக்கு ஶ்ரீ ஹயக்ரீவ மந்த்ரத்தை உபதேசித்தார்; மேலும் யோகதஶயில் இருக்கும் ஶ்ரீஹயக்ரீவ மூர்த்தியையும் அநுக்ரஹித்தார்.

**ஸுமதி :** பாட்டீ ! அம்மா சொல்லிருக்கா - அண்ணாவுக்கு அந்த மலைல தான் அக்ஷராப்யாஸம் பண்ணாளாம். ஸ்வாமி தேஶிகன் அங்கே கருட மந்த்ரத்தை ஜபிச்சதற்கும்; நெறையபேர் அங்கே அக்ஷராப்யாஸம் பண்றதுக்கும் ஏதாவது ஸம்பந்தம் உண்டா, பாட்டீ ?

**பங்கஜம் பாட்டி :** உண்டும்மா. வேதம்தானே எல்லா கல்விகளுக்கும் மூலம்; அந்த வேதத்துக்கே உயிர்நாடியா இருப்பவர், கருடபகவான். அவர் அநுக்ரஹத்தால் படிப்புக்கு தேவதையான ஶ்ரீஹயக்ரீவருடைய அருளைப் பெற்று, நல்ல புத்திசாலி ஆகலாம். ஹயக்ரீவ ஸ்தோத்ரத்துலே சொல்றயே 'ஆதாரம் ஸர்வ வித்யாநாம் ஹயக்ரீவம் உபாஸ்மஹே'-ன்னு, இதனால்தான்.


**ஸுமதி :** அப்பறம் என்ன ஆச்சு பாட்டீ !

**பங்கஜம் பாட்டி :** ஸ்வாமி தேஶிகன், ஹயக்ரீவரை த்யானம் செய்தார். ஹய க்ரீவர்-னா குதிரை முகம் கொண்ட பெருமாள்-னு அர்த்தம். பெருமாளும் ஸ்வாமி யின் முன்னே வந்தார். அந்த ஆச்சர்யமான மூர்த்தியை ப்ரமிப்போடு ஸ்வாமி திறந்த வாய் மூடாம ஸேவித்தார். குதிரையோல்யோ; எப்பவும் 'ஜொள்ளு' பெருகிண்ட்ருக் கும். அதுக்கு 'லாலாம்ருதம்' அப்படீன்னு சொல்லுவா. அது ஸ்வாமி தேஶிகன் வாயிலே சொட்டித்து. உடனே அவருக்கு நல்ல ஞானம் பெருகித்து. அதனாலே ஹயக்ரீவ ஸ்தோத்ரம், கருடபஞ்சாஶத், கருட தண்டகம் முதலிய ஸ்தோத்ரங் களையும்; அந்த ஊர்ப் பெருமாளான தேவநாயகன் பேரிலான தேவநாயக பஞ்சாஶத், மும்மணிக்கோவை, நவமணிமாலை முதலிய ஸ்தோத்ர / தமிழ் ப்ரபந்தங்களை அருளிச் செய்தார். அத்தோடு 'ப்ராக்ருதம்' என்ற ஸம்ஸ்க்ருத ங்கொச்சைசி வழக்கு மொழியில, அச்சுஅஸஅம் அப்படீன்ற ஒசத்தியான நூறு ஶ்லோகங்கள் கொண்ட ஸ்தோத்ரத்தையும் ஸமர்ப்பித்தார்.

**ஸுமதி :** நமக்கும்கூட அந்த மாதிரி நல்ல படிப்பு வருமா, பாட்டி.

**பங்கஜம் பாட்டி :** ஊஊம்; ஸ்வாமி தேஶிகன் க்ருபையும், ஹயக்ரீவர் அருளும் பெத்த எல்லார்க்கும் கிடைக்கும்.

(தொடரும்)




**SVDD thanks Sri M. Parthasarathy & Family, Nanganallur,**
for sponsoring this month's issue of Desika Sandesam

# ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்தில்
# ஸ்ரீ ஸுதர்சன மஹாயஜ்ஞம், 30.06.2018 சனிக்கிழமை

ஸ்ரீ:

ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீவிஜயவல்லீ ஸமேத ஸ்ரீஹேதிராஜ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ப்ரதிபடஶ்ரேணீபீஷண வரகுணஸ்தோம பூஷண
ஜநிபயஸ்தாந தாரண ஜகதவஸ்தான காரண ।
நிகில துஷ்கர்மகர்ஶந நிகமஸத்தர்மதர்ஶந
ஜய ஜய ஸ்ரீஸுதர்ஶந ஜய ஜய ஸ்ரீஸுதர்ஶந॥ – ஸ்ரீஸுதர்ஶநாஷ்டகம்

## ஸ்ரீ ஸுதர்ஸன மஹாயஜ்ஞ பத்திரிகை 2018

ஶ்ரிய: பதியான ஸ்ரீமந் நாராயணனே "அஹமேவ–வேத்ய:" என்கிறபடி மாடமாமயிலை ஸ்ரீவேதாந்த தேஶிகன் ஸந்நிதியில் எழுந்தருளி பக்த ஸம்ரக்ஷணம் செய்து வருகிறார். பரமகாருணிகரான ஸ்ரீ ஸர்வேஸ்வரனுக்கு ஸர்வசக்திகளில் இச்சாசக்தி, க்ரியாசக்தி என்கிற இரு விசேஷமான சக்திகள் உண்டு. இச்சாசக்தி ஸ்ரீமஹாலக்ஷ்மியும், க்ரியாசக்தி ஸ்ரீ சக்ரரூபமான ஸ்ரீ ஸுதர்ஸந ஆழ்வானும் ஆவார்கள். பகவான், ஸ்ரீஸுதர்ஸநனைக்கொண்டு ஸகல பாபங்களையும், எல்லாவிதமான தோஷங்களையும், கஷ்டங்களையும் விலக்கி அடியார்களுக்கு ஸகலவிதமான க்ஷேமங்களையும் அளிக்கிறான். மேற்படி நம் தேவஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ஸுதர்ஸநாழ்வார்க்கு நாளது விளம்பி ஞு ஆனி மீ 16ம் தேதி (30.06.2018) சனிக்கிழமை பிரபல ஆகம விற்பன்னர்களால் ஸ்ரீமஹா ஸுதர்ஸந ஹோமம் பண்ண எம்பெருமான் திருவுள்ளம் பற்றியிருக்கிறான். இவ்வைபவத்தில் ஆஸ்திகோத்தமர்கள் ஸகல விதத்திலும் கலந்து கொண்டு ஸ்ரீஸுதர்ஸந ஆழ்வார் க்ருபாகடாக்ஷத்திற்கு பாத்திரர்களாகும்படி ப்ரார்த்திக்கிறோம்.

<u>தர்மகர்த்தாக்கள்</u>

R.முகுந்தன் P.சேஷாத்ரி N. கஸ்தூரிரங்கன்

## உற்சவ விவரம் / நிகழ்ச்சி நிரல்

***29.06.2018 - வெள்ளிக்கிழமை***

*மாலை 8:30 மணிக்கு - ஸ்ரீஸுதர்ஸந ஹோமத்திற்காக அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம்*

***30.06.2018 - சனிக்கிழமை***

*காலை 8:00 மணிக்கு - சதுஸ்தானார்ச்சனை (கும்பம், மண்டலம் ஆராதனம்)*
*9:00 மணிக்கு - ஸங்கல்பம், 10:00 மணிக்கு ஹோமம் ஆரம்பம்*
*12:00 மணிக்கு - பூர்ணாஹுதி*
*12:30 மணிக்கு - ப்ரஸாத விநியோகம்*

**சாங்கல்ப நன்கொடை ரூ. 1000/-**

ஸேவார்த்திகள் ஹோமத்திற்குண்டான பசுநெய், தேன், பழங்கள், புஷ்பங்கள் போன்ற திரவியங்கள் மற்றும் நன்கொடைகளை தேவஸ்தான அலுவலகத்தில் நேரில் செலுத்தலாம்





வைகாசி ச்ரவண உத்ஸவம்



